**கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம் - 2011**

------------------------------------------------------------------------------------------------

**1. அபிப்பிராயம்**

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 1,311,682,460 ஆக இருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,136,595,943 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **விடயம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2011** | **2010** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சிவில் வேலைகள் | 952,669,759 | 367,997,436 | 1,323,997,436 |
| செயற்பாட்டுக் கிரயம் | 213,738,637 | 82,733,476 | 415,914,376 |
| ஆலோசனை சேவைகள் | 51,689,398 | 63,577,776 | 193,942,392 |
| பெறுமதி சேர் வரி (வற்) | 93,584,666 | 94,602,987 | 203,523,893 |
| | 1,311,682,460 | 608,911,675 | 2,136,595,943 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயற்பாடுகளிற்காகவும் தெற்கு ஆற்று நீர் வடிகால் மற்றும் வருமானமற்ற நீர் செயற்திட்டங்களின் புனரமைப்பிற்காகவும் செயற்திட்ட நிதிகளில் முறையே ரூபா 3,487,816 மற்றும் ரூபா 61,370 தொகைகள் செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இல் சான்றுபடுத்திய நிர்மாண வேலைகள் சம்பந்தமாக ரூபா 50,775,374 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செயற்திட்டச் செலவினம் மற்றும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த

வேண்டிய தொகை இரண்டும் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டமானது புதிய அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக காணித்துண்டொன்று சுவீகரித்திருந்ததுடன் தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கும் உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அத்தகைய கொடுப்பனவுகள் உடன்பட்டவாறு செய்யப்பட்டிருக்காததுடன் இதன்விளைவாக, ரூபா 1,656,666 மேலதிகக் கிரயம் தண்டப்பணமாக 2011 இல் செயற்திட்டத்தால் செய்யப்பட வேண்டியிருந்தது.

(ஈ) ஆரம்ப புலனாய்வில் இனங்காணப்பட்டிருந்த காணியில் நிலத்தடியில் பாறையொன்று இனங்காணத் தவறியமை காரணமாக எலிய ஹவுஸ் நீர்த் தேக்கங்களின் நேராக்கலிற்காக செய்யப்பட்ட பாறை வெடிவைத்தலிற்காக ரூபா 4,816,276 மேலதிக கிரயம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கப்பட்ட நிதிகள் மற்றும் அவற்றின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிப்பதற்காக உடன்பட்டதொகை | | 2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2011 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2011 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|
| | ஜ.யென் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| ஜேஐசீஏ | 3,975 | 3,549 | 868 | 838 | 1,883 | 53 |
| இலங்கை அரசாங்கம் | 1,384 | 1,236 | 320 | 320 | 644 | 52 |
| மொத்தம் | 5,359 | 4,785 | 1,188 | 1,158* | 2,527* | 53 |

* மீளாய்வாண்டிற்காக பயன்படுத்திய நிதிகள் மற்றும் 2011 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முறையே ரூபா 153 மில்லியன் மற்றும் ரூபா 391 மில்லியன் தேறிய தொழிற்படு மூலதனத்தை தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் வேறுபடுகின்றன.

## 4.2 நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 66 சதவீதம் மற்றும் 49 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் ஒவ்வொரு கூறினதும் திரட்டிய செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | செயற்திட்ட நடவடிக்கை / ஆக்கக் கூறு | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் % | |
|---|---|---|---|---|
| | | | நிதிசார் | பௌதீக |
| (i) | மாளிகாகந்தை அலுவலக கட்டிட நிர்மாணம் (டபிள்யூஎஸ்டிபீ/ஜீசீடபிள்யூ ஆர்பி/என்சீபீ/01) | 2011 மே 31 | 81 | 99 |
| (ii) | முல்லேரியாவ மற்றும் கொட்டிகாவத்தை பிரதான விநியோகம் (டபிள்யூஎஸ்டிபீ/ஜீசீடபிள்யூ ஆர்பி/என்சீபீ/02) | 2012 யூலை 19 | 57 | 61 |
| (iii) | எலியா ஹவுஸ் நீர்தேக்க மீள் நிர்மாணம், மாளிகாகந்த புதிய பாறை, கோதாதுவ பிரதான பரிமாற்று மற்றும் கோதாதுவ புதிய நீர் கோபுரத்தின் நிர்மாணம் (டபிள்யூஎஸ்டிபீ/ஜீசீடபிள்யூ ஆர்பி/என்சீபீ/03) | 2012 நவம்பர் 25 | 39 | 48 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | குறைந்த வருமான தீர்ப்பனவு நீர் வழங்கல் முன்னேற்றங்கள் | 2012 சனவரி 01 | 18 | 62 |
| **ஒட்டுமொத்த முன்னேற்றம்** | | | **49** | **66** |

(ஆ) தனிப்பட்ட நீர் வழங்கலை வழங்குவதற்கு குறைந்த வருமான தீர்ப்பனவின் 1000 வீட்டுடமையாளர்களை இனங்காண்பதற்கும் அத்தகைய நட்டங்களை குறைப்பதற்கு முறைகளை அமுலாக்குவதற்கு தண்ணீர் விரயப் பகுதிகளை இனங்காண்பதற்கும் திட்டமிட்டிருந்த செயற்திட்டத்தின் குறைந்த வருமான தீர்ப்பனவு நீர் வழங்கல் முன்னேற்ற கூறு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 சதவீத மெதுவான முன்னேற்றத்தை காட்டியது. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய ஆக்கக் கூறிற்காக ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 9,547,998 ஆக இருந்ததுடன் அத்தகைய செலவினத்தின் 37 சதவீதம் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் பகுதியாக பிரிக்கும் நோக்கத்திற்காகவும் ஏற்பட்டிருந்தது.

(இ) கொத்தட்டுவ- கொலன்னாவ மற்றும் முல்லேரியா பகுதியில் வழங்கல் மற்றும் விநியோக வலையமைப்பிற்குமான ஒப்பந்தம் 2010 ஏப்ரல் 22 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் 2013 செப்தெம்பரில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.